எண்.8282/இசநி/கோ.1/2020
புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறை
மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம் (3வது மாடி)
பேட்டையான் சத்திரம், புதுச்சேரி - 605 009

---------

புதுச்சேரி நாள்: 27.03.2020.

# சுற்றறிக்கை

பொருள்: இசநி– கொரோனோ வைரஸ் தொற்று – பரவாமல் தடுக்கும் வழிமுறைகள் - அறிவுறுத்தல் - சம்மந்தமாக.

பார்வை: 1. 17.03.2020 மற்றும் 20.03.2020ஆம் தேதியிட்ட இத்துறையின் இதே எண்ணிட்ட சுற்றறிக்கைகள்.
2. 25.03.2020 தேதியிட்ட செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அவர்களின் ஆணை எண்.1703/DRDM/DM/D2/2020

****

மேலே பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கைகளின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மேற்படி புதுச்சேரி, சுகாதாரத்துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்கண்ட சுற்றறிக்கைகளின் வாயிலாக திருக்கோயில்களை பொறுத்தவரை கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க பல்வேறு வழிமுறைகளையும் மற்றும் விதிமுறைகளையும் கையாளும்படி திருக்கோயில் நிர்வாகத்தினரிடம் அறிவுறுத்தப்பட்டு இருந்தது.

3. மேற்கூறியுள்ள வழிமுறைகளில் / விதிமுறைகளில் ஒன்றாக ஆலய வளாகத்தில் கூட்டம் கூடுவதை தவிர்க்க பொது தரிசனம் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் 31.03.2020 வரை ரத்து செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருந்தது. தற்போது பார்வை 2-ல் கூறப்பட்டுள்ள ஆணை மூலம் செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, புதுச்சேரி அவர்கள் கொரோனோ தடுப்பு நடவடிக்கையாக, கொரோனோ தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள துறைகள் / நிறுவனங்கள் தவிர புதுச்சேரியில் உள்ள ஏனைய துறைகள் / நிறுவனங்கள் 25.03.2020 அன்று முதல் 21 நாட்களுக்கு மூடப்படுதல் வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

4. எனவே செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, புதுச்சேரி அவர்களின் ஆணைக்கு இணங்கவும் மேலும் மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் கொரோனோ தொற்று தடுப்பு நடவடிக்கையாக ஆலய வளாகத்தில் கூட்டம் கூடுவதை தவிர்க்க

...2/-

Scanned with CamScanner

பொது தரிசனம் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் **மறு உத்தரவு வரும்வரை ரத்து செய்யப்பட வேண்டும்** என்று இதன்மூலம் பணிக்கப்படுகிறது. மேற்கண்ட சுற்றறிக்கைகளில் கூறப்பட்டுள்ள மற்ற அனைத்து கொரோனோ தடுப்பு நடவடிக்கைகளும் தொடர்ந்து பின்பற்றப்படவேண்டும் என்றும் பணிக்கப்படுகிறது.

5. இதனை மிக மிக அவசரம் என கருதவும்.

/ஆணைப்படி/

(ஞா. சச்சிதானந்தம்)
**ஆணையர்**
**இந்து சமய நிறுவனங்கள்**
O/C 27/3/2020

HINDU RELIGIOUS INSTITUTIONS Puducherry

பெறுநர்:

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சி பரப்பில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்து திருக்கோயில் நிர்வாகத்தினர்.

நகல் பெறுநர்:

1. மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி/காரைக்கால்.
2. இயக்குநர் சுகாதாரத்துறை, புதுச்சேரி.
3. **துணை** மாவட்ட ஆட்சியர்(வருவாய்) (தெற்கு/வடக்கு) புதுச்சேரி/கவில்லியனூர். காரைக்கால்.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. செயலர்(இசநி), தலைமைச்செயலகம், புதுச்சேரி.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச்செயலர், சட்டப்பேரவை வளாகம், புதுச்சேரி.

Scanned with CamScanner